



# ராயப்பேட்டை வெஸ்லி பள்ளி மைதானத்தில் 130 ஆக்சிஜன் படுக்கையுடன் கொரோனா சிகிச்சை மையம்

## ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, மே 23–**

**சென்னை ராயப்பேட்டையில் உள்ள வெஸ்லி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 130 படுக்கைகள் கொண்ட கொரோனா சிகிச்சை மையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.**

சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட பகுதிகளில் நாள்தோறும் கொரோனா தொற்று எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தொற்று பாதித்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் அம்பத்தூர் அத்திப்பட்டு உள்ளிட்ட பகுதிகள் மற்றும் பள்ளிகள், கல்லூரிகளில் கொரோனா சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் தொற்று சற்று அதிகம் பாதித்தவர்களுக்கு அரசு மருத்துவமனைகள் உதவியுடன் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய சிகிச்சை மையங்கள் அமைக்கும் பணியில் மாநகராட்சி ஈடுபட்டு வருகிறது. இதன்படி நந்தம்பாக்கம் வர்த்தக மையம், தண்டையார்பேட்டையில் உள்ள தொற்று நோய் மருத்துவமனை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் மணலி சமுதாய மருத்துவமனைகளில் ஆக்சிஜன் படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதை மேலும் அதிகரிக்கும் வகையில் ராயப்பேட்டை வெஸ்லி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையம் அமைக்கும் பணியை மாநகராட்சி மேற்கொண்டு வந்தது. இந்தப் பணி நிறைவடைந்ததை அடுத்து, இந்த கொரோனா சிகிச்சை மையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, உதயநிதி ஸ்டாலின் எம்.எல்.ஏ., பெருநகர சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், இந்த சிகிச்சை மையத்தில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 130 படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. சிகிச்சை பெறுவோருக்காக நவீன கழிப்பறைகள் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு அனுமதிக்கப்படுவோருக்கு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ராயப்பேட்டை அரசு மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள் சிகிச்சை அளிக்கும் பணியில் ஈடுபடுவார்கள் என்று தெரிவித்தனர்.

# சென்னையில் கொரோனா பாதித்த 51,982 பேருக்கு தொலைபேசி மூலம் மருத்துவ ஆலோசனை

**சென்னை, மே 23–**

**சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கோவிட் தொற்று பாதித்து வீடுகளில் தனிமை படுத்தப்பட்டுள்ள 51,982 பேர் மண்டல கட்டுப்பாட்டு அறையிலிருந்து தொலைபேசி வாயிலாக அழைக்கப்பட்டு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது என முதன்மை செயலாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருமான ககன்தீப் சிங் பேடி தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் கூறியதாவது:–

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட் தொற்று பாதித்து முதல் கட்ட உடற் பரிசோதனைகளுக்கு பிறகு மருத்துவர்களின் ஆலோசனையின்படி 52,039 பேர் வீடுகளில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்களின் உடல்நிலை குறித்து நாள்தோறும் தொடர்ந்து கண்காணிக்கவும், தனிமையின் காரணமாக ஏற்படும் மனஅழுத்தத்திற்கு ஆலோசனை வழங்கவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மண்டல அலுவலகங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டு பயிற்சி மருத்துவர்கள் மூலமாக தனிமை படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

மண்டல கட்டுப்பாட்டு அறைகளிலிருந்து பயிற்சி மருத்துவர்களின் வாயிலாக இதுநாள் வரை 51,982 பேர் தொலைபேசி வாயிலாக அழைக்கபட்டு அவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், மனநல ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளது என ககன்தீப் சிங் பேடி தெரிவித்தார்.

# சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு செல்ல 1,500 சிறப்பு பஸ்கள் இயக்கம்

**சென்னை, மே.23**

**தளர்வுகள் இல்லாத முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளதால் சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு செல்பவர்களுக்காக 1,500 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

கொரோனா நோய்த்தொற்றைத் தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 10ந்தேதி முதல் நாளை (திங்கட்கிழமை) வரையில் 2 வாரங்களுக்கு மாநிலம் முழுவதும் தளர்வுகளுடன் கூடிய ஊரடங்குக்கு உத்தரவிட்டிருந்தார். தற்போது நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக நாளை காலை முதல் அடுத்த ஒரு வாரத்துக்கு தளர்வுகள் இல்லாத முழு ஊரடங்கை நீட்டித்து உத்தரவிட்டுள்ளார்.

இந்தநிலையில் சொந்த ஊர் செல்லும் பயணிகளின் நலன் கருதி வெளியூர்களுக்கு நேற்று அரசு மற்றும் தனியார் பஸ்கள் இயக்கப்பட்டன. தொடர்ந்து இன்றும் (ஞாயிற்றுக்கிழமை) வெளியூர்களுக்கு பஸ்களை இயக்க அரசு அனுமதி அளித்து உள்ளது. அதன்படி போக்குவரத்துத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பனின் அறிவுறுத்தலின்படி, அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பில் 2 நாட்களுக்கு சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு 1,500 பஸ்களை இயக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

### 3 ஆயிரம் பஸ்கள்

மாநிலத்தில் முக்கிய நகரங்களான நாகர்கோவில், நெல்லை, தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவை, சேலம் உள்ளிட்ட நகரங்களுக்கு இடையே 3 ஆயிரம் பஸ்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

பயணிகள் அதிகமாக வரும் பட்சத்தில் தேவையான பஸ்கள் கூடுதலாக இயக்கப்பட உள்ளன. சென்னையில் இருந்து இன்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியூர்களுக்கு கடைசியாக புறப்படும் சிறப்பு பஸ்களின் நேரமும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

குறிப்பாக சென்னையில் இருந்து இன்று மார்த்தாண்டத்துக்கு இரவு 6 மணி, நாகர்கோவில், தூத்துக்குடிக்கு இரவு 7 மணி, செங்கோட்டைக்கு இரவு 7.30 மணி, நெல்லை, திண்டுக்கல்லுக்கு இரவு 8 மணி, மதுரைக்கு இரவு 11.30 மணி, திருச்சிக்கு இரவு 11.45 மணிக்கு பஸ்கள் இயக்கப்படுகின்றன. இந்த பஸ்களில் பயணம் செய்பவர்கள் முககவசம் அணிந்திருப்பதுடன், கிருமிநாசினி பயன்படுத்துதல் போன்ற வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

கோயம்பேடு மற்றும் தாம்பரம் பஸ் நிலையங்களுக்கு மாநகரின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பஸ்கள் இயக்கப்படுகின்றன.

இவ்வாறு அரசு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### ஆம்னி பஸ்கள்

இதற்கிடையே கடந்த 10ந் தேதியில் இருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டதால் மூடப்பட்டு கிடந்த கோயம்பேடு பஸ் நிலையம் நேற்று பரபரப்பானது.

அனைத்து ஆம்னி பஸ்கள் உரிமையாளர்கள் சங்க மாநிலத் தலைவர் ஏ.அன்பழகன் கூறியதாவது:

தளர்வுகளற்ற முழு ஊரடங்கை அமல்படுத்த இருப்பதையொட்டி தமிழக அரசு சிறப்பு பஸ்களை இயக்குகிறது. இதேபோன்று ஆம்னி பஸ்களையும் இயக்க அரசு கேட்டுக்கொண்டது. அதனடிப்படையில் மாநிலம் முழுவதும் பல்வேறு நகரங்களில் இருந்து நேற்று உடனடியாக 150 ஆம்னி பஸ்கள் இயக்கப்பட்டன. தொடர்ந்து இன்று 200 ஆம்னி பஸ்களை இயக்க முடிவு செய்துள்ளோம். சென்னையில் இருந்து நாகர்கோவில், நெல்லை, தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவை உள்பட பல்வேறு நகரங்களில் ஆம்னி பஸ்கள் இயக்கப்பட்டன. ஆனால் இந்தப்பகுதிகளில் இருந்து எதிர்பார்த்த அளவு பயணிகளிடம் வரவேற்பு இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## ★ மளிகை, காய்கறி கடை உட்பட அனைத்து கடைகளும் மூடப்படும்
## ★ தோட்டக்கலைத்துறை மூலம் காய்கறிகள் நேரடியாக வினியோகம்
## ★ உணவகங்களில் பார்சலுக்கு அனுமதி ★ வழக்கம்போல் பால், குடிநீர் வினியோகம்

# நாளை முதல் ஒரு வாரத்திற்கு தளர்வில்லா முழு ஊரடங்கு

## ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, மே 23–**

**நாளை முதல் ஒரு வாரத்திற்கு தமிழ்நாட்டில் தளர்வில்லா முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

நேற்று சென்னையில் மருத்துவ நிபுணர் குழுவினர், அனைத்து கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவினருடன் ஆலோசனை நடத்திய பின்னர் இதனை முதலமைச்சர் அறிவித்தார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

பெருந்தொற்று பரவலைக் கட்டு படுத்த தற்போதுள்ள ஊரடங்கினை 24.5.2021 முதல் மேலும் ஒரு வார காலத்திற்கு முழுமையாக எவ்விதத் தளர்வுகளுமின்றி தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும்

★ இந்த முழு ஊரடங்கு 24.5.2021 காலை முதல் நடைமுறைக்கு வரும்.

இந்த முழு ஊரடங்கு காலத்தில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மட்டும் அனுமதிக்கப்படும்

★ மருந்தகங்கள், நாட்டு மருந்து கடைகள், கால்நடை மருந்தகங்கள்

★ பால் விநியோகம், குடிநீர் மற்றும் தினசரி பத்திரிக்கை விநியோகம்

★ பொது மக்களுக்கு தேவையான காய்கறிகள், பழங்கள், தோட்டக்கலைத் துறை மூலமாக சென்னை நகரத்திலும், அனைத்து மாவட்டங்களிலும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து வாகனங்கள் மூலமாக வழங்கப்படும்

★ தலைமைச் செயலகத்திலும், மாவட்டங்களிலும், அத்தியாவசியத் துறைகள் மட்டும் இயங்கும்

★ தனியார் நிறுவனங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் போன்றவற்றில் பணிபுரிவோர், வீட்டிலிருந்தே பணிபுரிய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

★ மின்னணு சேவை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை இயங்கலாம்.

### உணவகங்களில் பார்சல்

★ உணவகங்களில் காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும், நண்பகல் 12 மணி முதல் மதியம் 3 மணி வரையிலும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் பார்சல் சேவை மட்டும் அனுமதிக்கப்படுகிறது. ஸ்விக்கி, சோமாடோ போன்ற மின் வணிகம் மூலம் உணவு விநியோகம் செய்யும் நிறுவனங்கள் மேற்கண்ட நேரங்களில் மட்டும் அனுமதிக்கப்படும்

★ பெட்ரோல், டீசல் பங்க்குகள் வழக்கம் போல் இயங்கும்

★ ஏடிஎம் மற்றும் அவற்றிற்கான சேவைகள் அனுமதிக்கப்படும்.

★ வேளாண் விளை பொருட்கள் மற்றும் இடுபொருட்களை கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படும்

★ சரக்கு வாகனங்கள் செல்லவும், அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு செல்லவும் அனுமதிக்கப்படும்.

★ உரிய மருத்துவக் காரணங்கள் மற்றும் இறப்புகளுக்காக மட்டும் மாவட்டம் விட்டு மாவட்ட செல்ல இ–பதிவுடன் அனுமதிக்கப்படும்

★ மருத்துவக் காரணங்களுக்காக மாவட்டத்திற்குள் பயணிக்க இ–பதிவு தேவையில்லை.

### இன்று மட்டும் கடைகள் திறப்பு

★ செய்தி மற்றும் ஊடக நிறுவனங்கள் வழக்கம் போல் இயங்கலாம்.

★ தடையின்றி தொடர்ந்து செயல்பட வேண்டிய தொடர் செயல்முறை தொழிற்சாலைகள், அத்தியாவசியப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி அனுமதிக்கப்படும்.

### பொதுமக்கள் நலன்

★ பொது மக்கள் நலன் கருதி, இன்று (22.5.2021) இரவு 9 மணி வரையிலும், 23.5.2021 (ஞாயிற்றுக்கிழமை) ஒரு நாள் மட்டும் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை அனைத்துக் கடைகளும் திறக்க அனுமதி வழங்கப்படுகிறது.

★ மால்கள் திறந்திட அனுமதி கிடையாது.

★ வெளியூர் செல்லும் பயணிகளின் நலன் கருதி, 22–ந்தேதி மற்றும் 23–ந்தேதி (இன்று) தனியார் மற்றும் அரசு பேருந்துகள் வெளியூர் செல்வதற்கு அனுமதிக்கப்படும்.

கொரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த, பொது மக்களின் நலன் கருதி தமிழ்நாட்டில் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், பொது மக்கள் அவசியமின்றி வீட்டிலிருந்து வெளியில் வருவதையும் கூட்டங்களையும் தவிர்க்க வேண்டும். மேலும், கொரோனா மேலாண்மைக்கான தேசிய வழிகாட்டு நடைமுறைகளில் குறிப்பிட்டுள்ளபடி, பொது இடங்களில் முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியினை கடைபிடிப்பது, கைகளை அடிக்கடி சோப்பு, கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்வது ஆகியவற்றை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

மேலும், நோய்த்தொற்று அறிகுறிகள் தென்பட்டவுடன், பொதுமக்கள் உடனே அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடி மருத்துவ ஆலோசனை, சிகிச்சை பெற வேண்டும். மக்கள் அனைவரும் அரசின் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# மூன்றில் ஒரு பங்கு ஊழியர்களுடன் நாளை முதல் வங்கிகள் செயல்படும்

**சென்னை, மே 23–**

**தளர்வுகள் இல்லாத ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மூன்றில் ஒரு பங்கு ஊழியர்களுடன் வங்கிகள் செயல்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.**

கொரோனா நோய்த்தொற்று பரவலை கட்டுப்படுத்த மே 10ந்தேதி முதல் நாளை வரை முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை தொடர்ந்து வங்கிகள் 50 சதவீத ஊழியர்களுடன் செயல்பட்டு வந்தன. மேலும் வங்கி பரிவர்த்தனைகள் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும், ஊழியர்களுக்கான வேலை நேரம் மாலை 5 மணி நேரம் வரையும் செயல்பட்டன.

இந்நிலையில், கொரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த நாளை முதல் ஒரு வாரத்துக்கு தளர்வுகள் இல்லாத ஊரடங்கை தமிழக அரசு அறிவித்து அதற்கான உத்தரவை தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு பிறப்பித்துள்ளார்.

அந்த உத்தரவில் வங்கிகளில் பணிபுரியும் ஊழியர்கள் வீட்டில் இருந்தே பணிபுரியலாம். ஏ.டி.எம். மற்றும் அவற்றுக்கான சேவைகள் அனுமதிக்கப்படும். மூன்றில் ஒரு பங்கு ஊழியர்களுடன் வங்கிகள் செயல்பட அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'இ–பதிவு' மூலமாக திருமணத்துக்கு செல்ல அனுமதி இல்லை

**சென்னை, மே 23–**

**'இ–பதிவு' மூலமாக திருமணத்துக்கு செல்ல அனுமதி இல்லை என்று அரசு தெரிவித்துள்ளது.**

தமிழகம் முழுவதும் கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக பல கட்டங்களாக ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டு உள்ளது. இதன் ஒரு கட்டமாக வெளிநாடுகள், வெளிமாநிலங்களில் இருந்து தமிழகம் வருவோருக்கும், மாவட்டம் விட்டு மாவட்டம் செல்வோருக்கும் 'இ–பதிவு' கட்டாயம் என அரசு அறிவித்தது.

அதன்படி திருமணம், மருத்துவ அவசரம், முதியோர் பராமரிப்பு, இறப்பு மற்றும் இறப்பு சார்ந்த காரியங்களுக்காக 'இபதிவு' மூலம் பொதுமக்கள் வெளியூர்களுக்கு சென்று வந்தனர். இந்த நிலையில் தற்போது 'இ–பதிவு' நடைமுறைகளில் இருந்து திருமணம் எனும் காரணம் தவிர்க்கப்பட்டு இருக்கிறது.

இதன்மூலம் 'இ–பதிவு' மூலமாக திருமணத்துக்கு செல்வதற்காக பொதுமக்கள் பதிவு செய்ய முடியாது. கடந்த ஆண்டில் 'இ–பதிவு' நடைமுறையில் இருந்தபோது திருமணத்துக்கு செல்வதற்காக அனுமதி தரப்பட்டிருந்தது. ஆனால் தற்போது கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக 'இ–பதிவு' நடைமுறையில் இருந்து திருமணம் எனும் காரண குறிப்பு நீக்கப்பட்டு இருக்கிறது.

## சென்னை மாநகராட்சி பகுதிகளில்

# வீடுகள் தோறும் சென்று கொரோனா பரிசோதனை செய்யும் களப்பணியாளர்களுக்கு 3 அடுக்கு முகக்கவசம்

## கமிஷனர் ககன்தீப் சிங் பேடி தகவல்

**சென்னை, மே 23–**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வீடுகள் தோறும் சென்று கோவிட் தொற்று அறிகுறி குறித்து கணக்கெடுப்பு செய்யும் களப்பணியாளர்களுக்கு மாநகராட்சியின் சார்பில் முகக்கவசம் உட்பட பாதுகாப்பு பொருட்கள் வழங்க பட்டுள்ளதாக மாநகராட்சி கமிஷனர் ககன்தீப் சிங் பேடி தெரிவித்துள்ளார்.**

இது குறித்து கமிஷனர் ககன்தீப் சிங் பேடி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கோவிட் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக சென்னையில் உள்ள வீடுகளில் வசிக்கும் பொதுமக்களைநாள்தோறும்அணுகி கோவிட் தொற்று அறிகுறிகளான சளி, காய்ச்சல் மற்றும் இருமல் போன்ற அறிகுறிகள் உள்ளனவா என கணக்கெடுப்பு செய்யவும், அறிகுறி உள்ள நபர்களை காய்ச்சல் முகாம்களுக்கு அல்லது அருகாமையில் உள்ள மாநகராட்சி சுகாதார நிலையங்களுக்கு செல்ல அறிவுறுத்துதல், 45 வயதிற்கு மேற்பட்ட நபர்களின் தடுப்பூசி செலுத்திக்கொண்ட விவரம் போன்ற பணிகளை மேற்கொள்ள 11,963 களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



இந்த களப்பணியாளர்களின் கணக்கெடுப்பின்படி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இதுநாள் வரை 5,08,538 நபர்கள் தொற்று அறிகுறி உள்ள நபர்களாக கண்டறியப்பட்டு அவர்களில் 4,50,873 நபர்களுக்கு ஆர்டிபிசிஆர் தடவல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீடுகள்தோறும் சென்று களப்பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு மாநகராட்சியின் சார்பில் உரிய பயிற்சி அளிக்கப்பட்டு, கோவிட் தொற்று பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்ற நாள்தோறும் ஆலோசனை வழங்கப்படுகிறது. மேலும் களப்பணியாளர்கள் இந்த பாதுகாப்பு வழிமுறைகளை தவறாமல் பின்பற்ற ஏதுவாக அவர்களுக்கு மாநகராட்சியின் சார்பில் 15 நாட்களுக்கு ஒரு முறை மூன்றடுக்கு முகக் கவசங்கள் 15 எண்ணிக்கையிலும், 5 எண்ணிக்கையிலான மறு பயன்பாட்டுடன் கூடிய முகக் கவசங்கள் மற்றும் கைகளை அவ்வப்போது சுத்தம் செய்ய கிருமி நாசினி போன்ற பாதுகாப்பு பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

கோவிட் தொற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து மருத்துவர்களின் ஆலோசனையின்படி முறையான சிகிச்சைகளை பின்பற்றினால் விரைவில் குணம் அடையலாம். எனவே பொதுமக்கள் கோவிட் தொற்றுக்கான அறிகுறிகள் ஏதேனும் இருப்பின் தங்கள் இல்லங்களுக்கு நாள்தோறும் வரும் களப்பணியாளர்களிடம் எவ்வித அச்சமுமின்றி தெரிவித்து தங்களின் உடல் வெப்பநிலை, சுவாசத்தில் ஆக்சிஜன் அளவு போன்ற அடிப்படை பரிசோதனைகளை தங்கள் இல்லங்களிலேயே மேற்கொண்டு பயனடைய வேண்டும்.


## ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB®

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

**மார்ச் 31, 2021 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்**

ரூபாய் லட்சங்களில் (EPS தவிர)

| வ. எண் | விவரங்கள் | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த ஆண்டு | |
|---|---|---|---|---|---|---|
| | | மார்ச் 31, 2021 (தணிக்கை செய்யப்பட்டது) | டிசம்பர் 31, 2020 (தணிக்கை செய்யப்படாதது) | மார்ச் 31, 2020 (தணிக்கை செய்யப்பட்டது) | மார்ச் 31, 2021 (தணிக்கை செய்யப்பட்டது) | மார்ச் 31, 2020 (தணிக்கை செய்யப்பட்டது) |
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் | 20,846 | 18,701 | 17,878 | 69,234 | 71,147 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்) | 2,738 | 1,975 | 2,560 | 8,053 | 9,724 |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 2,738 | 1,975 | 2,560 | 8,053 | 9,724 |
| 4, | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 1,972 | 1,471 | 1,807 | 5,929 | 7,141 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)] | 1,910 | 1,464 | 1,813 | 5,847 | 7,116 |
| 6 | சமபங்கு மூலதனம் | 1,539 | 1,539 | 1.539 | 1,539 | 1,539 |
| 7 | பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ 10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | | |
| | அ) அடிப்படை | 12.81 | 9.56 | 11.74 | 38.52 | 46.40 |
| | ஆ) குறைமதிப்பு | 12.81 | 9.56 | 11.74 | 38.52 | 46.40 |

**குறிப்பு :**

1. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மார்ச் 31, 2021 முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் National Stock Exchange of India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக

சென்னை
மே 21, 2021

"We shape the Future"
Visit our website : http://www.esabindia.com

ரோஹித் கம்பீர்
மேலாண்மை இயக்குனர்